1974 சனவரி 24]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் மில்க் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனின் மூலம் குழந்தை உணவு தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை ஈரோடில் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

Supply of Kerosiene

*146 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the steps taken by the Government to increase the supply of Kerosene in this State?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மத்திய அரசு மாநிலங்களுக்கு ஒவ்வொரு மாதமும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. அதை மாநில அரசு சில்லறை விற்பனையாளர்கள் மூலமும், கைவண்டிக்காரர்கள் மூலமும் மக்களுக்கு வினியோகம் செய்கிறது. மத்திய அரசு மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை உயர்த்தினால்தான், அதிக அளவு மண்ணெண்ணெய் வினியோகிக்க முடியும்.

திரு. என். கே. பழனிசாமி : மண்ணெண்ணெயின் விலை எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை. சில இடங்களில் ஒரு லிட்டர் 83 காசாகவும், மற்றொரு இடத்தில் 85 காசாகவும், இப்படி மாறுபட்டிருக்கிறது. எனவே, மண்ணெண்ணெய் விலையை ஒரே சீராக வைத்து விற்பனை செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, மண்ணெண்ணெய் விலை சென்னை பூராவும் ஒரே சீராக லிட்டருக்கு 85 காசுகள் என்று நிர்ணயித்திருக்கிறோம். மண்ணெண்ணெய் விலை நிர்ணயிக்கிற அதிகாரம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெயின் போக்குவரத்துச் செலவையொட்டி, அதனுடைய விலை மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபடலாம். குறிப்பாக, சென்னைக்கு மண்ணெண்ணெய் மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து வருகிறது. இங்கே இல்லையென்றால் கொச்சியிலிருந்து வருகிறது. எனவே, மண்ணெண்ணெய் கொண்டுவருவதற்கான போக்குவரத்துச் செலவை ஒட்டி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதன் விலையை நிர்ணயிக்கிறார்கள். எனவே, லிட்டருக்கு 85 பைசா, 86 பைசா, 87 பைசா என்ற முறையில் வித்தியாசம் இருக்கலாம்.